


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் கதைகள்

PUBLIC LIBRARY
JAFFNA

# அம்மா சொன்ன கதைகள்

Discarded
Nallur Branch Library

20 - 8 - 1995

115720

தமிழவேள்

1993

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொழும்புத் தமிழ்ச்சங்க வெளியீடு 21**

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | 1993 மார்ச்சு |
| நூல் | : | **அம்மா சொன்ன கதைகள்** |
| ஆசிரியர் | : | தமிழவேள் |
| வெளியீடு | : | கொழும்புத் தமிழ்ச்சங்கம் |
| அச்சகம் | : | ஸ்ரார்லைன் பிறிண்டேர்ஸ், கொழும்பு 14. |
| விலை | : | ரூ. 50/– |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கு |

★

| | | |
|---|---|---|
| *First Edition* | : | March 1993 |
| *Title* | : | AMMA CHONNA KATHAIKAL |
| *Author* | : | Thamizhavel |
| *Publishers* | : | Colombo Thamil Sangam |
| *Printers* | : | Starline Printers, 213, Grandpass Road, Colombo 14. |
| *Price* | : | Rs. 50/– |
| *Copyrights* | : | To Author |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

**கு. சோமசுந்தரம்**

*உதவிக் கல்விப் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவனம், மகரகம*

நமது முன்னோர் அளித்த அருஞ் செல்வங்களாகவும், முது சொத்துக்களாகவும் தமிழிலக்கியங்கள் விளங்குகின்றன. நாம் அவற்றிற்கெல்லாம் வாரிசுகள் என்று கூறிக் கொள்வதில் பெருமையடைகின்றோம்.

கல்வியின் பிரதான நோக்கங்களுள் ஒன்றாக, பண்பாட்டுச் செல்வங்களைப் பேணிப் பாதுகாத்து அடுத்த தலைமுறையினருக்குக் கையளித்தல் இடம் பெறுகின்றது. இலக்கியங் கள், பண்பாட்டுச் செல்வங்கள் ஆகும்.

இலக்கியங்கள் வாயிலாக, அவை எழுந்த காலப் பகுதியில், வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறைகள், வாழ்க்கை விழுமியங்கள், நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை அறிந்து கொள்ள முடிகிறது. அவ்வாறு அறிந்து கொள்வதன் மூலம், நாம் எம்முடைய வாழ்க்கையை வளம் படுத்திக் கொள்ள முடிகிறது. புதுமை, பழமையிலிருந்துதான் பொங்கியெழ வேண்டும் என்ற கூற்று எத்துணைப் பொருத்தமானது.

இலக்கியங்கள் பழமையானவை. அதனால் அதனைத் தள்ளி வைக்க முடியுமா? அந்த இலக்கியங்கள்தானே, எமது பெருமைக்குக் காரணம். எனவே, இளம் பராயத்தி லிருந்தே, இலக்கியங் கற்பதில், சிறுவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். இலக்கியங் களைப் படைத்த புலவர்களின் வரலாறுகளையும், அவர்களோடு தொடர்பான சம்பவங் களையும், இலக்கியங்கள் எழுந்த பின்னணிகளையும் பற்றித் தெரிந்து கொள்ளும்போது தான், இலக்கியத்தில் சிறுவர்களுக்கு ஆர்வமும், சுவையும் ஏற்படும். அதற்கு இன்றியமை யாததாகத் தேவைப்படுபவை அவை பற்றிய நூல்கள்.

பெரியவர்களுக்கென எழுதப்பட்ட நூல்கள் பல வெளிவந்துள்ளன. அவற்றில் சிறுவர் களுக்குப் பயன் அதிகம் இல்லை. சிறுவர்களுக்கென இத்துறைகளில் எழுதப்பட்ட நூல்கள் மிக அரிது. ஆசிரியர் க. இ. க. கந்தசுவாமி அவர்கள் சிறுவர் நிலைக்குக் கீழிறங்கி, அவர் களுக்கு ஏற்ற வகையில், எளிய நடையில், கதை கூறும் பாங்கில், சுவைபட இந்நூலை ஆக்கியுள்ளார். காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்துள்ளார். அரிய முயற்சி. சங்க காலப் புலவர்கள், பிற்காலப் புலவர்கள் ஆகியோரில், ஒரு சிலர் பற்றிய வரலாறுகள், கதைக் குறிப்புகள், சம்பவங்கள் ஆகியவற்றை எடுத்துரைக்கும் இந்நூல், சிறுவர்கள் வாசித்து இன்புறுவதற்கு ஏற்றதாக அமைக்கப்பட்டிருப்பது அதன் சிறப்பு அம்சமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

சிறுவர்க்கான கல்வி இன்று முதன்மை பெற்றுள்ளது. சிறுவர்க்கான கல்வியை வழங்கு வதிற் பெற்றோர் பெரும் ஆர்வம் வைத்துள்ளனர். பாடநூல்களொடு பயனுள்ள துணை நூல்களையும் சிறுவர்கள் கற்க வேண்டியவர்கள் ஆவர். இதற்காகச் சிறுவர் இலக்கிய நூல்கள் வெளிவருகின்றன.

சிறுவர் இலக்கியங்களுட் கதை நூல்கள் முதன்மை பெற்றுள்ளன. கதைகளை வாசிப் பதிற் சிறுவர் அதிக ஆர்வம் கொண்டுள்ளனர். பிராணிகள்—மக்கள் பற்றிய கற்பனைக் கதைகள், வரலாற்றுக் கதைகள், சமயக் கதைகள், அறிவியற் கதைகள் எனச் சிறுவர் கதை நூல்கள் பல உள்ளன.

கற்பனைக் கதைகள், பிறநாட்டு வரலாற்றுக் கதைகள் என்பவற்றொடு உண்மையான எம் நாட்டு வரலாற்றுக் கதைகளையும் சிறுவர்கள் கற்றல் வேண்டும். இதனாற் பெரும் பயன் உண்டு. வாழ்வாங்கு வாழவும், பண்பாடுகள் நிலைபெறவும் இவை உதவுவன.

இச்சங்கம் சிறுவர்களுக்கு உரிய வகையில் முன்பு வெளியிட்ட 'சிறுவர் கதைகள்' என்னும் நூல் இந்நாட்டிலும் பிற நாடுகளிலும் பெரும் ஆதரவைப் பெற்றது. அந்நூல் மீள் பதிப்பாகப் பலமுறை வெளிவந்தது.

தமிழ்மொழியை வளர்த்து அதற்காக வாழ்ந்த பெரும் புலவர்களைப் பற்றிய கதை களை 'அம்மா சொன்ன கதைகள்' என்னும் பெயரொடு இச்சங்கம் வெளியிட்டுள்ளது. இந்நூல் பிற நாடுகளில் உள்ள சிறுவர்க்கும் உதவும். இந்நூல் சிறுவர்க்கு உரிய வகையில் எளிமையாகவும் சுவையாகவும் எழுதப்பெற்றுள்ளது. சிறுவர்களது இலக்கிய அறிவை வளர்த் தற்காக எளிதான பாக்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இந்நூல் சிறுவர்க்கு ஏற்ற அமைப்புகளை உடையது. இந்நூலைத் தமிழுலகு உவந் தேற்றுப் பயன் பெறுவதாக.

இந்நூலுக்குச் சிறந்த அணிந்துரை வழங்கிய தேசிய கல்வி நிறுவன உதவிப் பணிப் பாளர் திரு. கு. சோமசுந்தரம் அவர்களுக்கும், ஓவியங்களை வரைந்து உதவிய திரு. எஸ்.ஏ. பிள்ளை அவர்களுக்கும், இந்நூலை நன்கு அச்சிட்டு உதவிய கொழும்பு ஸ்ரார்லைன் அச்சகத்தினர்க்கும் எமது நன்றிகள்.

**க. இ. க. கந்தசுவாமி**
பொதுச் செயலாளர்,
கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

சங்க அகம்,
7, 57 ஆம் ஒழுங்கை,
கொழும்பு 6.
01.01.1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் வாழ்த்து

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்"

"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல"

*(திருக்குறள்)*

# பெரியோர் வாழ்த்து

"பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் அடியேன்"

*(திருத்தொண்டத்தொகை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கடலைப் பருகிய முனிவர் | 1 |
| 2. | பூதத்தை வென்ற புலவர் | 4 |
| 3. | அண்ணனுக்காக அரசு துறந்த தம்பி | 8 |
| 4. | போரைத் தடுத்த புலவர் | 11 |
| 5. | நரை திரை இன்றி வாழ்ந்த புலவர் | 15 |
| 6. | சுட்ட பழமும் சுடாத பழமும் | 18 |
| 7. | இறைவனைப் பணி கொண்ட புலவர் | 21 |
| 8. | கம்பங் கொல்லை காத்த புலவர் | 25 |
| 9. | வெட்டப்பெற்ற உடல்களை உயிர்பெறச்செய்த புலவர் | 30 |
| 10. | ஆசு கவியாற் புகழ்பெற்ற புலவர் | 33 |
| 11. | இரட்டைப் புலவர்கள் | 38 |
| 12. | புதிய பாடல்களைப் பழைய பாடல்களாக ஆக்கிய புலவர் | 41 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. கடலைப் பருகிய முனிவர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் தொடக்க காலத்தில் அகத்தியர் என்னும் முனிவர் இருந்தார். இவர் முனிவர்களுட் தலைமையானவர். பேரறிவும், பெரும் அருளாற்றலும் உள்ளவர். இறைவனுக்கு ஒப்பானவராக விளங்கினார்.

உலகின் வடதிசைக்கண் இமயமலை உள்ளது. தென்திசைக் கண் பொதியமலை உள்ளது. இறைவன் கட்டளைப்படி அகத்திய முனிவர் பொதிய மலையில் வாழ்ந்து வந்தார். எல்லா இடங்களில் இருந்தும் முனிவர்களும் அறிஞர்களும் இவரைக் காண்பதற்குப் பொதிய மலைக்கு வருவர். அதனாற் பொதியமலை அக்காலத் தில் உலகின் பொது இடமாக விளங்கியது. அதனாற் 'பொதுஇல்' எனப் பெயர் பெற்றது. அச்சொல் பின்பு பொதியில், பொதியை என ஆகியது.

அகத்தியர் தமிழ் மொழியையும் கலைகளையும் இறைவ னிடம் கற்று உணர்ந்தார். அவற்றை உலகிற் பரப்பினார். தமிழ் மொழி வளர்ச்சிக்காக முதற் தமிழ்ச் சங்கத்தை நிறுவினார். இது உலகில் நிறுவப் பெற்ற முதற் சங்கம். அகத்தியம் என்னும் நூலை எழுதினார். இது தமிழில் எழுதப்பெற்ற முதல் நூல் ஆகும்.

அகத்தியர் செயற்கரிய செயல்கள் பல செய்துள்ளார். ஒரு முறை அகத்தியர் வடக்கே இமய மலையில் இருந்து தெற்கு நோக்கி நிலவழியாக நடந்து சென்றார். வழியிலே கிரவுஞ்சன் என்னும் அசுரன் ஒரு மலையாக நின்று இவருக்குத் தீங்கு செய்ய நினைத் தான். அசுரனது வஞ்சனையை உணர்ந்த அகத்தியர் அவனை மலையாகவே நிற்கும்படி செய்து தெற்கு நோக்கி நடந்தார்.

ஓரிடத்தில் விந்தம் என்னும் மலை மிக நீண்டு மிக உயர்ந்து இவரது வழியைத் தடை செய்தது. அகத்தியர் இறைவனை நினைத்துத் தம் கையை மேலே உயர்த்தி அம் மலையின் மேல் வைத்து அழுத்தினார். உடனே மலை தளர்வுற்றுத் தாழ்ந்தது. அவர் அதனைக் கடந்து தெற்கு நோக்கிச் சென்றார்.

ஓரிடத்தில் வில்லவன், வாதாபி என்னும் இரு அசுரர் இருந் தனர். அவர்கள் மிக வல்லமை உள்ளவர்கள். அவ்வழியே செல் பவர்களை விருந்துக்கு அழைப்பர். வாதாபி ஆடு போல உருவெடுப் பான். வில்லவன் அதனைக் கொன்று உணவு ஆக்கி விருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பான். விருந்தினர் அவ்வுணவை உண்ட பின், 'தம்பி வாதாபி வா' என வில்லவன் அழைப்பான். உணவு உண்டவரின் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வாதாபி வெளியே வருவான். விருந்தினர் இறந்து போவர். வில்லவன் அகத்தியரையும் விருந்துக்கு அழைத் தான். தான் ஆக்கிய உணவை அவருக்குக் கொடுத்தான். அவர் அதை உண்ட பின், வில்லவன் வழக்கம் போல் 'வாதாபி வா' என அழைத்தான். அவனின் வஞ்சனையை முன்பே அறிந்த அகத்தியர் தமது வயிற்றைத் தடவினார். வாதாபி இறந்தான். அகத்தியரின் பெருமையை வில்லவன் உணர்ந்தான். தன்னை மன்னிக்கும் படி அகத்தியரை அவன் வேண்டி நின்றான். அவனுக்கு அகத்தியர் அறிவுரை கூறினார். பின்பு அவர் தென் மேற்கே உள்ள குடகு மலை நோக்கிச் சென்றார்.

இறைவன் கொடுத்த நீர் நிறைந்த கமண்டலத்தைப் பக்கத் தில் வைத்து விட்டு அங்கு உள்ள ஓரிடத்தில் அவர் தங்கி இருந்தார். அப்போது சோழ நாட்டில் நீண்ட காலமாக மழை பெய்யாமையால் நீரின்றி உயிரினங்கள் துன்புற்றன. பயிர்கள் வாடின. அரசன் மிக வருந்தி விநாயகரிடம் முறையிட்டான். விநாயகர் ஒரு காகமாகச் சென்று அகத்திய முனிவரது கமண்டலத்தைச் சரித்து விட்டார். அதில் உள்ள நீர் ஆறாகச் சோழ நாட்டை நோக்கி ஓடியது. இது காவிரி ஆறு என்னும் பெயரோடு தமிழ் நாட்டை வளப்படுத்திக் கொண்டு இருக்கிறது.


ஒரு முறை தேவர்களின் அரசனான இந்திரனுக்கும் அசுரர் களின் தலைவனான விருத்திராசுரனுக்கும் பெரும் போர் நிகழ்ந் தது. ஈற்றில் விருத்திராசுரன் தோல்வியுற்றுக் கடல் நடுவில் மறைந் திருந்தான். இந்திரன் அகத்திய முனிவரிடம் முறையிட்டான். அகத்திய முனிவர் தமது தவத்தின் வலிமையால் கடல்நீர் முழுவ தையும் பருகினார். விருத்திராசுரன் அங்கிருந்து வெளியே வந்தான். உடனே இந்திரன் தன் வச்சிராயுதத்தினால் அவனைக் கொன்றான்.

அகத்தியருக்குக் குறுமுனி, தமிழ்முனி எனப் பெயர்கள் உள் ளன. அகத்தியர் அனைத்துக்கலைகளையும் அறிந்தவர். அனைத் துக் கலைகளுக்கும் அவரே முதல்வர். அவரது மருத்துவ முறை உலகிற் பரந்து விளங்குகிறது. இன்றும் பொதிய மலையில் அவர் இருப்பதாகக் கூறுகின்றனர். அவரைக் கடவுளாக வணங்குகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. பூதத்தை வென்ற புலவர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்காலத்திலே தமிழ் நாட்டிலே மதுரை மாநகரிலே தமிழ்ச் சங்கம் ஒன்று இருந்தது. தமிழ் மொழியையும் நல்ல வாழ்க்கை நெறிகளையும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. பாண்டிய மன்னர்கள் இச்சங்கத்தையும் இச்சங்கத்துப் புலவர்களையும் ஆதரித்து வந்தனர். இப்புலவர்களுள் நக்கீரர் என்னும் புலவர் சிறந்த புலமையும் மிக்க ஆற்றலும் உள்ளவர். புலவர்களுட் தலைமையானவராக விளங்கினார்.

அக்காலத்துப் பாண்டிய மன்னன் ஒரு நாள் தன் அரண் மனைச் சோலையில் தனது மனைவியோடு இருந்தான். அப்போது புதிய நறுமணம் ஒன்று வீசியது. எவ்வாறு வந்தது என்பதை யிட்டு அவன் சிந்தித்தான். உள்ளத்திற் சந்தேகம் உண்டானது. தனது சந்தேகத்தை நீக்கும் பாடலைப் பாடித் தரும் புலவருக்குப் பெரும் பரிசில் தருவதாக அறிவித்தான்.

அப்போது மதுரைக் கோயிலிற் தருமி என்னும் அந்தணர் ஒருவர் பூசகராக இருந்தார். அவர் பொருள் வளம் இல்லாதவராக இருந்தார். பாண்டிய மன்னன் அறிவித்தபடி பாடலைப் பாடி அப் பரிசிலைப் பெற விரும்பினார். தனது விருப்பத்தை அக்கோயிலில் இறைவனிடம் முறையிட்டார். அவரது வேண்டுதலினால் இறைவன் ஒரு பாடலைக் கோயிற் படியில் வைத்தார். அவர் அப்பாடலை எடுத்துப் பார்த்தார். மன்னனிடம் பரிசில் பெற இறைவன் அருளி னான் என நினைத்தார். அதனை அவர் மன்னனிடம் கொடுத் தார். அப்பாடல் மன்னனின் சந்தேகத்தை நீக்கியது. அப்பாடலுக் குப் பரிசில் வழங்குவதாக மன்னன் சங்கப் புலவர்களுக்கு அறி வித்தான்.

மன்னனின் மனைவியின் கூந்தலுக்கு நறுமணம் இயற்கை யாக இருக்கிறது என அப்பாடலில் இருந்தது. கூந்தலுக்கு இயற்கை மணம் இல்லை; ஆதலின் அப்பாடலுக்குப் பரிசில் வழங்குதல் தகாது எனப் புலவர் நக்கீரர் தெரிவித்தார். அதனால் தருமிக்கு மன்னன் பரிசில் வழங்குதல் தடைப்பட்டது. தருமி இதனை இறை வனிடம் முறையிட்டான்.

அடுத்த நாள் இறைவன் ஒரு புலவராகத் தருமியோடு சங் கப் புலவர்களிடம் சென்றார். 'எமது பாடலிற் குறை கூறியவர் யார்? அதில் என்ன குறை இருக்கிறது?' எனக் கேட்டார். "யானே அப்பாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிற் குறை கூறினேன். மன்னனது மனைவியின் கூந்தலுக்கு நறு மணம் இயற்கையாக இருக்கிறது என அப்பாடலில் இருக்கிறது. அது தவறானது' என நக்கீரர் கூறினார். 'இறை சக்தி உமையம் மையின் கூந்தலுக்கு நறுமணம் இயற்கையாக இல்லையோ' என இறைவரான புலவர் கேட்டார். 'உமையம்மையின் கூந்தலுக் கும் இயற்கையாக நறுமணம் இல்லை' என நக்கீரர் கூறினார். தான் இறைவன் எனவும் அப்பாடலைத் தானே பாடினார் எனவும் அவர் கூறினார். இறைவனே பாடினார் ஆயினும் அப்பாடல் பொருட்குற்றம் உடையது' என நக்கீரர் கூறினார்.

அதனால் நக்கீரர் இறைவனின் வெறுப்புக்கு ஆளானார். பெரும் வெப்பம் அவருக்கு உண்டானது. அதனை அவர் தாங்க இயலாமல் அயலில் இருந்த பொற்றாமரை வாவியில் வீழ்ந்தார். இறைவனை எதிர்த்தது தவறு என உணர்ந்தார். தம்மை மன்னிக் கும் படி இறைவனை வேண்டினார். அவரது வெப்பு நோய் நீங் கியது.

பின்பு அங்கிருந்து வடக்கு நோக்கிச் சென்றார். வழியிலே ஒரு மரத்தின் கீழ், கடவுட் தியானத்தில் இருந்தார். மரத்தின் முன் பாக ஒரு குளம் இருந்தது. அம்மரத்தின் இலை ஒன்று பாதி நீரி லும் பாதி நிலத்திலுமாக விழுந்தது. நீரில் விழுந்த பகுதி மீனாக வும் நிலத்தில் விழுந்த பகுதி பறவையாகவும் ஆயின. மீன் நீரி லும் பறவை நிலத்திலும் செல்லுவதற்காக அசைந்து கொண்டி ருந்தன. இதனை நக்கீரர் பார்த்தார். அவர் தமது தியானத்திற் தவறிவிட்டார் என்று சொல்லி ஒரு பூதம் அவரைத் தூக்கிச் சென்று மலைக் குகையுள் வைத்தது.

அக்குகையுள் மனிதர்கள் பலர் இருந்தனர். நக்கீரர் அங்கு சென்றதினால் அனைவரும் பெரும் கலக்கம் அடைந்தனர். 'எங்கள் அனைவரையும் ஒவ்வொருவராக இப்பூதம் இங்கு கொண்டு வந் துள்ளது. தொளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது மனிதர் இருக் கின்றோம். ஆயிரம் மனிதர் ஆனதும் எங்கள் அனைவரையும் கொன்று உண்பதாகப் பூதம் எண்ணியுள்ளது. இப்போது நீர் வந்த தனால் ஆயிரம் மனிதர் ஆகின்றோம். பூதம் எங்களை ஒவ்வொரு வராகக் கொன்று உண்ணும். அதனாற் பெரும் கலக்கம் அடைந் துள்ளோம்' என அவர்கள் கூறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அனைவரையும் பூதத்திடம் இருந்து பாதுகாக்கின்றேன். நீங்கள் பயப்பட வேண்டாம்" என நக்கீரர் கூறினார். உடனே முருகப் பெருமானை நினைத்தார். தங்கள் அனைவரையும் பூதத்திடம் இருந்து பாதுகாக்கும்படி வேண்டினார். அதற்காகத் 'திருமுருகாற்றுப்படை' என்னும் நூலைப் பாடினார். உடனே முருகக் கடவுளின் வேல் வந்து அப்பூதத்தைக் கொன்றது. அனைவரும் அக்குகையில் இருந்து வெளியே வந்தனர். தங்கள் அனைவரையும் பூதத்திடம் இருந்து பாதுகாத்த நக்கீரரை அவர்கள் பாராட்டினர். பின்பு அவர் திருக்காளத்தித் திருத்தலம் சென்று வணங்கினார். அங்கு ஒரு நூலை அவர் பாடினார்.

வடதிசையில் இருந்து வந்த ஒருவன் தமிழ் மொழியை இகழ்ந்து கூறினான். அதனைக் கேட்ட நக்கீரர் அவன் மீது வெறுப்புற்றுப் பாடினார். உடனே அவன் இறந்துவிட்டான். உடனே அவன் மீது இரக்கமுற்றுப் பாடினார். உடனே அவன் உயிர்பெற்று எழுந்து நக்கீரரை வணங்கிச் சென்றான்.

பின் அவர் மதுரைக்குச் சென்றார். சங்கப் புலவர்கள் நிகழ்ந்த அனைத்தும் கேட்டு நக்கீரரைப் பாராட்டினர்.

"ஒங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்து இருள்கடியும் — ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னேர் இலாத தமிழ்"


— தனிப்பாடல்

115720



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. அண்ணனுக்காக அரசு துறந்த தம்பி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைக் காலத்திலே தமிழ் நாட்டிலே நெடுஞ்சேரலாதன் என்னும் அரசன் இருந்தான். இவன் சேர நாட்டை ஆண்டு வந்தான். இவனுக்கு இரு ஆண்மக்கள் இருந்தனர். முதல் மகனின் பெயர் செங்குட்டுவன். இரண்டாவது மகன் பெயர் இளங்கோ.

ஒருநாள் அரண்மனையிலே அரசனும் மனைவியும் பிள்ளைகளும் மகிழ்ச்சியாக உரையாடிக் கொண்டு இருந்தனர். அப்போது அங்கு சோதிடர் ஒருவர் சென்றார். அவர் அனைத்துத்துறை அறிவும் உள்ளவர். அவரை அரசன் வரவேற்று உபசரித்தான். சோதிடர் ஓர் ஆசனத்தில் இருந்தார். அரசனும் அச் சோதிடரும் பலவற்றைப் பற்றி உரையாடிக் கொண்டு இருந்தனர்.

அப்போது சோதிடர் "அரசே! தங்களின் பின் தங்கள் அரசு தங்களின் இளைய மகனுக்கு உரியதாக வரும். அவன் பெரும் அரசனாக விளங்குவான்" எனக் கூறினார். அனைவரும் பெரும் வியப்படைந்தனர். "அண்ணன் இருக்கத் தம்பி எவ்வாறு அரசன் ஆகலாம்" என்று அரசன் வினவினான். 'அவ்வாறு நிகழ வேண்டிய நிலை இருக்கிறது' எனச் சோதிடர் கூறினார்.

சோதிடர் கூறியவற்றைக் கேட்ட செங்குட்டுவன் பலவாறு சிந்தித்தான். அவனது மனம் பெரும் வேதனையுற்றது. உடனே அவன் அவ்விடம் விட்டுச் சென்றான். அரசனும் அரசியும் பெரும் சிந்தனையில் ஆழ்ந்தனர். அண்ணன் வெறுப்போடு சென்றதையும் பெற்றோர் துன்புற்று இருப்பதையும் இளங்கோ பார்த்தார். "தந்தையே! நீங்கள் துன்புற வேண்டாம். அண்ணனும் துன்புற வேண்டாம். நான் அரச வாழ்வையும் அரச உரிமையையும் விட்டுவிடுகின்றேன். யான் இங்கு இருந்தால் சோதிடர் கூறியவை நிறைவேறலாம். ஆதலின் அரண்மனையை விட்டுத் துறவியாக வேறிடம் சென்று வாழ்வேன்" என இளங்கோ கூறினார். அவரை அவ்வாறு செய்ய வேண்டாம் என அவர்கள் கூறியதை அவர் ஏற்கவில்லை. அண்ணனுக்காக அவ்வாறு செய்தலே தம் கடமையென இளங்கோ கூறினார்.

நாள்கள் சில சென்றன. இளங்கோ அரண்மனையை விட்டு நீங்கினார். ஒரு காட்டிலே ஓர் ஆச்சிரமத்தை அமைத்தார். துறவியாக அங்கு வாழ்ந்தார். சமய ஆராய்ச்சியிலும் கடவுள் வழிபாட்டிலும் ஈடுபட்டார். தமிழ்மொழி, இசை, நாடகம், சமயம் ஆகியவற்றை ஆராய்வதிலும் ஈடுபட்டார். பெரும் புலவராகவும் விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளங்கோ அரச குமாரன் இளங்கோ அடிகளானார். சேரலாதனின் பின் செங்குட்டுவன் அரசன் ஆனான். அவனது ஆட்சியின் போது கணவன் அநீதியான முறையிற் கொலை செய்யப்பட்டதற்காக மதுரையை எரியூட்டிய கண்ணகி சேரநாடு சென்று அங்குள்ள குன்றின் வழியே வான் சென்றாள். அருள் உரைகள் வழங்கினாள். கண்ணகி அருளாற்றலை அறிந்த செங்குட்டுவன் அங்கு அவளுக்குக் கோயில் அமைத்து வழிபாடு செய்தான்.

கண்ணகியின் வரலாற்றை இளங்கோ அடிகள் சிலப்பதிகாரம் என்னும் பெருங்காப்பியமாக எழுதினார். சிலப்பதிகாரம் மிகப் பழைமையானது. தமிழில் வந்த முதற் பெரும் காப்பியம். இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் அமைப்புக்களை உடையது. தமிழ்ப் பெண் ஒருவரைக் காப்பியத் தலைவியாக உடையது. சோழ நாடு, பாண்டி நாடு, சேர நாடு ஆகிய நாடுகளை ஒன்றாக இணைப்பது. தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் நிலவி வந்த சமயம், குலம், மாநிலம் ஆகிய வேறுபாடுகளைக் கடந்து அவர்கள் வாழும் அனைத்துப் பகுதிகளையும் ஒரு தமிழகம் ஆகக் கண்ட பெருமை இளங்கோ அடிகளுக்கே உரியது.

இத்துணைச் சிறப்புகள் உள்ள பெரும் காவியத்தை ஆக்கியதனால் இளங்கோ அடிகள் தமிழ் நாட்டில் அனைவரும் போற்றுதற்குரியவராக உள்ளார். அவர் உலகப் புகழ் பெற்ற பெரும் புலவர்களுள் ஒருவராக உள்ளார். அவர் தமிழ் கூறும் உலகம் போற்றும் அருளரசர் ஆக உள்ளார். அதனாலேயே "யாமறிந்த புலவர்களிலே கம்பரைப் போல வள்ளுவரைப் போல இளங்கோவைப் போல யாங்கணுமே கண்டதில்லை" என மகா கவி பாரதியார் இளங்கோ அடிகளைப் போற்றினர்.

"சிலப்பதிகாரம் என்னும் மணியாரம்
படைத்த தமிழ்நாடு"

— மகாகவி பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. போரைத் தடுத்த புலவர்

Discarded
Nallur Branch Library





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சோழநாட்டிலே கோவூர்கிழார் என்னும் புலவர் ஒருவர் இருந்தார். இவர் இளமைக் காலத்தில் நல்லாசிரியர்களிடம் தமிழ் மொழியைக் கற்றுப் பெரும் புலமை பெற்றுப் பெரும் புலவராக விளங்கினார். இவர் அனைவரிடமும் அன்பும் அருளும் பிறருக்கு உதவும் பண்பும் உள்ளவர். துன்புறுபவர்களைக் கண்டு துன்புற்று அத்துன்பம் நீங்க அவர்களுக்கு விரைந்து உதவும் இயல்பினர். உள்ளத்தில் நன்கு பதியும்படி நல்லுரைகளை உறுதியோடு கூறும் ஆற்றல் உடையவர். அனைவரும் பகைமையும் துன்பமும் இன்றி வாழவேண்டும் என்பதையும் நாட்டிலே நீதியும் அறமும் நிலைபெற வேண்டும் என்பதையும் இவர் தம்குறிக்கோளாகக் கொண்டு இருந்தார். இவற்றால் இவரை அரசர்களும் மக்களும் பெரிதும் மதித்துப் போற்றினர்.

இவர் காலத்தில் நலங்கிள்ளி என்பவன் உறையூரிலும் நெடுங்கிள்ளி என்பவன் ஆவூரிலும் அரசர்களாக இருந்தனர். இருவரும் சோழர் குலத்தவர். ஆயினும் பெரும் பகைமை கொண்டிருந்தனர். ஒருவரோடு ஒருவர் போரிடுவதற்குப் பெரும் ஆயத்தங்கள் செய்து வந்தனர்.

இவ்வரசர் காலத்தில் இளம் தத்தனார் என்னும் புலவர் இருந்தார். அவர் இவ்விரு அரசர்களது கடும்பகையை அறியார். இவர் ஒருமுறை நலங்கிள்ளியிடம் சென்று பாடிப் பரிசில் பெற்றார். பின் நெடுங்கிள்ளியிடம் பரிசில் பெறச் சென்றார். இவர் நலங்கிள்ளியின் ஒற்றன் என நினைத்து அவன் இவரைச் சிறையில் வைத்ததோடு கொலையும் செய்யத் தீர்மானித்தான்.

இதனைக் கோவூர்கிழார் அறிந்தார். மனம் பதைபதைத்தார். உடனே விரைந்து அரசனிடம் சென்றார். "புலவர்கள் பரிசில் பெற்று வாழ்பவர்கள். தாம் பெற்ற பரிசில்களைத் தமக்கென வையாது உறவினர்க்கும் அயலவர்களுக்கும் கொடுப்பவர்கள். இப்புலவர் தூய உள்ளத்தவர். கள்ளம் கபடம் இல்லாதவர். நீங்கள் இருவரும் பகை என்பதை இவர் அறியார். நலங்கிள்ளியிடம் பரிசில் பெற்ற இவர் நின்னிடம் பரிசில் பெறவே வந்தார். புலவர்கள் பிறருக்குத் தீங்கு செய்ய நினைக்காதவர்கள். நீர் புவியரசர். இவர் கவியரசர். இவர் ஒற்றர் அல்லர். இவரை நீ கொல்லத் தீர்மானித்தது பெருந்தவறு ஆகும். ஆதலின் இவரை உடனே சிறையிலிருந்து விட்டுவிடு" எனக் கோவூர்கிழார் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவூர்கிழார் தெளிவாகவும், உருக்கமாகவும், உறுதியாக வும் கூறிய அறிவுரைகளைக் கேட்ட நெடுங்கிள்ளியின் மனம் இள கியது. தனது தவறை உணர்ந்தான். உடனே இளம் தத்தனாரைச் சிறையில் இருந்து விடுதலை செய்து அவருக்குப் பெரும் பரிசில்கள் வழங்கினான். இளம் தத்தர் மிக மகிழ்ந்தார். அரசனுக்கும் கோவூர் கிழாருக்கும் பெரும் நன்றி தெரிவித்துத் தம் வீடு சென்றார்.

நாளடைவில் இரு அரசர்களதும் பகை வளர்ந்து இரு அரசர் களுக்கும் இடையில் பெரும் போர் நிகழ்ந்தது. இரு பக்கங்களிலும் பெரும் அழிவுகள் ஏற்பட்டன. வீரர் பலர் இறந்தனர். யானைகளும் குதிரைகளும் இறந்தன. மக்கள் உணவின்றி வருந்தினர். இவற் றைக் கோவூர் கிழார் கண்டு மனம் மிக வருந்தினார். உடனே இரு அரசர்களிடமும் சென்றார்.

"நீங்கள் இருவரும் ஒரே குடியிற் பிறந்தவர்கள். உங்களுள் ஒருவர் வெல்லுவர். ஒருவர் தோல்வியுறுவர். வெற்றி தோல்வி ஆகிய இரண்டும் சோழர் குலத்துக்கே உரியன. வலிமை மிக்க சோழ நாடு உங்களால் இரு பிரிவுகளாக உள்ளது. இதனால் ஏனைய குலத்து அரசர் சோழநாட்டை எளிதாக வெற்றி கொள்வர். இப்போரி னாற் போர்வீரர் பலர் இறக்கின்றனர். யானைகளும் குதிரைகளும் இறக்கின்றன. மக்கள் உணவின்றிப் பெரும் இன்னல் உறுகின்றனர். நாட்டின் வளம் வீணாகின்றது. ஆகவே இப்போரை விலக்கி நீவிர் இருவரும் ஒற்றுமையாதல் வேண்டும்" எனக் கோவூர்கிழார் உருக்க மாகக் கூறினார். இப் புலவரின் அறிவுரைகளினால் இரு அரசர் களதும் உள்ளங்கள் மாறுதல் அடைந்தன. போரை நிறுத்தினர். இரு அரசர்களும் நண்பர்கள் ஆயினர். நாட்டு மக்கள் புலவரை மிகவும்பாராட்டிப் போற்றினர்.

இவர் காலத்தில் கிள்ளிவளவன் என்பவன் காவிரிப்பூம் பட்டி னத்தில் அரசனாக இருந்தான். மலையமான் திருமுடிக்காரி என்ப வன் திருக்கோவிலூரில் அரசனாக இருந்தான். இருவரும் அறநெறி நின்று நல்லாட்சி செய்தனர். தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் ஆதரித்தனர். எனினும் இருவரும் மிகவும் பகைமை கொண்டிருந் தனர். கிள்ளிவளவன் மலையமானோடு போரிட்டு அவனது பிள்ளை கள் இருவரைச் சிறைப்பிடித்து வந்தான். அவர்களை யானை முன் நிறுத்திக் கொல்லத் தீர்மானித்தான். இதனைக் கோவூர் அறிந்தார். உடனே கிள்ளிவளவனிடம் விரைந்து சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரசனே! புறா ஒன்றுக்காகத் தன்னைக் கொடுத்து அப்புறாவைக் காப்பாற்றிய சிபி அரசனது மரபினன் நீ. புலவர்கள் வறுமையை நீக்கப் பரிசில்கள் வழங்கும் வள்ளன்மை உள்ள மலையமானது பிள்ளைகள் இவர்கள். தங்களைக் கொல்ல வந்து நிற்கும் யானையைக் கண்டு இவர்கள் அஞ்சவில்லை. அதனை அன்பொடு பார்த்தவண்ணம் இருக்கின்றனர். இப்பிள்ளைகளைக் கொல்ல நீ தீர்மானித்தது அற நெறிக்கும் உனது நற்பெயருக்கும் மாறான செயல் ஆகும்" எனப் புலவர் அஞ்சாது அரசனுக்குக் கூறினார்.

புலவரின் அறிவுரையைக் கேட்ட கிள்ளிவளவனது உள்ளம் உருகியது. உடனே அப்பிள்ளைகளைக் கொல்லாது அவர்களது நாட்டிற்கு அனுப்பிவைத்தான். அனைவரும் புலவர் பெருமானைப் பாராட்டிப் போற்றினர்.

போர்களைத் தடுத்து நல்லிணக்கமும் ஒற்றுமையும் நாட்டில் நிலவச் செய்த இப்புலவரின் பாடல்கள் புறநானூறு என்னும் சங்க கால நூலில் இருக்கின்றன. தமிழ் நாட்டிற்குச் சிறப்புத் தந்தபுகழ் பெற்ற சங்ககாலப் புலவர்களுள் இவரும் ஒருவர்.

"அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்"

— பாண்டியன் நெடுஞ்செழியன்


"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்"

— திருக்குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. நரை திரை இன்றி வாழ்ந்த புலவர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழி மிக வளம் பெற்றிருந்த சங்க காலத்திலே பாண்டி நாட்டிற் பிசிர் என்னும் ஊரிலே ஆந்தையார் என்னும் பெரும் புலவர் ஒருவர் இருந்தார். இளமையிற் தமிழை நல்லாசிரியர்களிடம் கற்றுப் பெரும் புலவர் ஆனார். சிறந்த ஒழுக்கமும் கடவுட் பற்றும் உள்ளவர். இவர் பிசிர் என்னும் ஊரினர். ஆதலில் 'பிசிராந்தையார்' எனப் பெயர் பெற்றார். அறிவு, அன்பு, பண்பு, ஒழுக்கம் ஆகியவற்றில் மிக உயர்ந்த பெரியவராக விளங்கினார்.

இவர் காலத்தில் பாண்டி நாட்டைப் பாண்டியன் அறிவுடைநம்பி என்னும் மன்னவன் ஆட்சி செய்தான். இவன் அறிவாற்றல்களிலும் ஒழுக்கத்திலும் மிக்கவன். பரந்த நோக்கும் தமிழ்ப் பற்றும் உள்ளவன். அதனாற் பிசிராந்தையரொடு பெருநட்புக் கொண்டான். அவரது அறிவுரைகளின்படி ஆட்சியை நடத்தினான்

இப்புலவர் காலத்தில் கோப்பெருஞ்சோழன் என்னும் அரசன் சோழநாட்டை ஆட்சி செய்தான். இவன் தன்னுயிர் போல மன்னுயிரைப் பாதுகாத்து ஆட்சி செய்தான். இவன் சிறந்த கல்விமான்; நல்லொழுக்கம் உள்ளவன். நற்பண்புகளுக்கு இருப்பிடம் ஆனவன். நல்ல தமிழ்ப் புலமை உள்ளவன். புலவர்களுக்குப் பரிசில்கள் வழங்கி ஆதரித்தான். அவனது பரிசில்களினும் அவனது நட்பையே பெரிதாகப் புலவர்கள் மதித்தனர்.

இம்மன்னனின் பெரும் சிறப்புகளைக் கேள்வியுற்ற பிசிராந்தையார் இவ்வரசனிடம் பெரும் பற்றுக் கொண்டு இருந்தான். இம்மன்னனும் பிசிராந்தையாரின் பெருஞ் சிறப்புகளைக் கேள்வியுற்று இவரிடம் பெரும் பற்றுக் கொண்டிருந்தான். ஒருவரை ஒருவர் நேரிற் காணாவிடிலும் இவ்விருவரும் பெரும் நட்பினராக விளங்கினர்.

ஒருமுறை ஓரிடத்தில் பேரறிஞர் பலர் இருந்தனர். அங்கு பிசிராந்தையாரும் இருந்தார். "நீங்கள் முதுமைப் பருவத்திலும் நரை திரை இன்றி இளமையாக இருக்கிறீர்கள். இதற்குக் காரணங்களைத் தெரிவிக்க வேண்டும் என அவர்கள் பிசிராந்தையாரைக் கேட்டனர்.

"என் மனைவி சிறந்த குணம் உள்ளவள்; என்னைப் போல அறிவு உள்ளவள்; என் சொற்படி நடப்பவள். என் பிள்ளைகளும் அறிவு உள்ளவர்கள்; என் சொற்படி நடப்பவர்கள். என் வேலையாளர்களும் என் சொற்படி வேலைகளைச் செய்வர். அரசன் நீதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி ஆட்சி செய்பவன்; அறத்திற்கு மாறாக எதையும் செய்யான்; என் ஊரில் நற் பண்புகளும் அமைதியான கொள்கைகளும் உள்ள பெரியோர் பலர் உள்ளனர். இவற்றால் வீட்டிலும் நாட்டிலும் துன்பங்கள் கவலைகள் இல்லை. என்றும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். அதனால் நரை திரையும் முதுமையும் இன்றி இளமையாக இருக்கின்றேன்'' எனப் பிசிராந்தையார் கூறினார்.

கோப்பெருஞ் சோழன் தன் முதுமைக் காலத்தில் தன் ஆட்சியைத் தன் பிள்ளைகளிடம் கொடுத்துத் துறவு பூண்டு நாட்டின் புறத்தே உள்ள ஓரிடத்தில் இருந்து உண்ணா நோன்பை மேற்கொண்டான். புலவர்கள் பலர் அவனைச் சூழ இருந்தனர். தன் நோன்பை அறிந்ததும் தன் உயிர் நண்பர் பிசிராந்தையார் அங்கு வருவர் என அரசன் அப் புலவர்களிடம் கூறினான். "அப்புலவர் மிகத் தூரத்தே இருக்கிறார். தாங்கள் மேற்கொண்டுள்ள வடக்கிருத்தல் என்னும் நோன்பை அவர் அறியார். தாங்களும் அப் புலவரும் நேரிற் காணாத நட்பினர். ஆகவே அவர் இங்கு வருதல் இயலாது'' எனப் புலவர்கள் கூறினர். "எனக்கும் அப் புலவர்க்கும் உள்ள நட்பு உண்மை நட்பு. அது என் நோன்பு நிலையை அவர் உள்ளத்திற்கு உணர்த்தும். இங்கு அவர் விரைவில் வருவார்'' என அரசன் கூறினான்.


அரசன் கூறியபடி துறவு பூண்டு நோன்பு இருத்தலைப் பிசிராந்தையார் தம் உள்ளத்தில் அறிந்தார். உடனே அவர் புறப்பட்டு அரசன் இருக்கும் இடத்தை அடைந்தார். அரசன் சொன்னபடி பிசிராந்தையார் அங்கு வந்ததைக் கண்டு ஏனைய புலவர்கள் வியப்பு எய்தினர். பிசிராந்தையாரை அரசன் அன்போடு வரவேற்று மகிழ்ந்தான். பிசிராந்தையாரும் அரசனின் அன்புரைகளைக் கேட்டு மகிழ்ந்தார்.

பிசிராந்தையார் அரசன் வைத்திருந்த உண்மை நட்பினால் அரசனது பக்கலில் இருந்தார். அரசனைப் போல அவரும் உண்ணா நோன்பு இருந்தார். அரசன் உயிர் நீத்தபோது புலவரின் உயிரும் பிரிந்தது. அங்கிருந்த அனைவரும் இவ்விருவரும் உயிர் நீத்த இடத்தில் இருவருக்கும் உருவக் கற்கள் அமைத்து வழிபாடு செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. சுட்ட பழமும் சுடாத பழமும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்காலத்திலே தமிழ்நாட்டிலே பெண்கள் பலர் பெரும் புலவர்களாக விளங்கினர். அவர்களுள் ஔவையாரும் ஒருவர். இவரது தந்தை பகவன். தாய் ஆதி. இவர் பிறந்த போது இவரது பெற்றோர் இவரைப் பிறந்த இடத்திலே விட்டுச் சென்றனர். இவரைப் பாணன் ஒருவன் வளர்த்து வந்தான்.

ஔவையார் இயல்பாகக் கல்வி அறிவிலும் பாடல்கள் பாடுவதிலும் வல்லவராக விளங்கினார். பல இடங்களுக்கும் சென்று பாடல்கள் பாடியும் அறிவுரைகள் கூறியும் பரிசில்கள் பெற்று வாழ்ந்தார். இவரது பாடல்களும், அறிவுரைகளும், மக்கள் வாழ்வாங்கு வாழ வழிவகுத்தன. அதனால் மக்களும், அரசர்களும் ஔவையாரைப் பெரிதும் மதித்துப் போற்றினர்.

ஔவையார் திருமணம் ஆகாமல் நீண்டகாலம் வாழ்ந்தவர். அதனால் ஔவையார், தமிழ் மூதாட்டி என்னும் பெயர்கள் இவருக்கு வழங்கின. "ஔவை" என்னும் சொல்லின் பொருள் தாய் என்பதாகும். ஔவையாரைப் பற்றிய பல கதைகளும் செய்திகளும் உள்ளன.

பாரி, தொண்டமான் என்னும் அரசர்கள் ஔவையாரிடம் மிகப் பற்றுள்ளவர்கள். நீண்ட காலம் உயிர் வாழச் செய்யும் அரிய நெல்லிக் கனியைத் தொண்டமான் ஔவையாருக்குக் கொடுத்தான். பாரி, தொண்டமான் என்னும் அரசர்களை ஔவையார் சிறப்பித்துப் பல பாடல்களைப் பாடியுள்ளார். ஒரு முறை தொண்டமான், மலையமான் என்னும் அரசர் இருவருக்கும் போர் நிகழும் நிலை இருந்தது. போரினால் ஏற்படும் தீமைகளை ஔவையார் நன்கு அறிந்தார். ஆதலின் அரசர் இருவரிடமும் சென்றார். போரினால் நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்படக்கூடிய தீமைகளைக் கூறினார். அதனால் அரசர் இருவரும் போர் செய்தலை நிறுத்திவிடும்படி கூறினார். அரசர் இருவரும் போர் செய்தலை நிறுத்தி விட்டனர்.

ஒரு முறை ஔவையார் ஒரு வெளியிலே நடந்து சென்றார். நடந்து சென்ற களையினால் ஒரு நாவல் மரத்தின் கீழ் இருந்தார். மரத்தில் ஒரு சிறுவன் நாவற் பழங்களை எடுத்துத் தின்றுகொண்டு இருந்தான். தனக்கும் பழங்கள் தரும்படி ஔவையார் சொன்னார். "சுடாத பழமா, சுட்ட பழமா வேண்டும்" எனச் சிறுவன் கேட்டான். சுட்ட பழம், சுடாத பழம் எனச் சிறுவன் கூறியது ஔவையாருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கவில்லை. "பழங்களிற் சுட்ட பழம், சுடாத பழம் இருக்கின்றனவா" என ஔவையார் கேட்டார். "ஆம் அவை இருக்கின்றன" எனச் சிறுவன் சொன்னான்.

"சுடாத பழம் தா" என ஔவையார் சொன்னார். அவன் காய்களைப் பிடுங்கிக் கீழே போட்டான். ஔவையார் அவைகளைத் தின்றார். பின்பு "சுட்ட பழம் தா" எனச் சொன்னார். உடனே சிறுவன் ஒரு கிளையை அசைத்தான். உடனே நன்கு பழுத்த பழங்கள் நிலத்தில் விழுந்தன. அவற்றில் மணல் படிந்திருந்ததால் அவைகளில் இருந்த மண்ணைப் போக்கும் படி ஔவையார் வாயால் ஊதினார். அப்போது சிறுவன் "என்ன பாட்டி! பழம் நன்றாகச் சுடுகின்றதா" எனக் கேட்டான். 'சுடாத பழம் காய்ப் பழம்' எனவும், 'சுட்ட பழம் நன்றாகப் பழுத்த பழம்' எனவும் ஔவையார் அப்போது அறிந்தார். சிறுவனின் அறிவுத் திறமையைப் பாராட்டி வேறு இடம் சென்றார்.

ஒருமுறை சிலம்பி என்னும் பெண் தன்னைப் பற்றி ஒரு பாடல் பாடும்படி புலவர் கம்பரிடம் கேட்டாள். ஆயிரம் பொன் தரும் படி அவர் கூறினார். அவள் ஐந்நூறு பொன் அவரிடம் கொடுத்தாள். அவர் அரைப் பாடல் ஒன்றைப் பாடி விட்டுச் சென்றார். அதன் பின்னர் ஔவையார் அங்கு சென்றார். நடந்தவற்றை அவள் ஔவையாரிடம் கூறினாள். அவள் கொடுத்த கூழை ஔவையார் அருந்தினார். அதற்காக மீதி அரைப் பாடலைப் பாடிக் கொடுத்தார்.

ஒருமுறை பெரும் புலவர் ஒருவர் ஔவையாரை 'அடீ' எனக் கூறினார். உடனே ஔவையார் "கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே" எனக் கூறி அவர் நாணமுறச் செய்தார்.

ஔவையார் மக்களோடு மக்களாக வாழ்ந்தார். சிறுவர்களுக்காகப் பாடல்களை ஔவையாரே முதன் முதலிற் பாடியவர் ஆவர். "கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு" என்பது அவர் கூறிய அறிவுரைகளுள் ஒன்று.


ஔவையார் இருவர். ஒருவர் சங்ககாலத்தில் வாழ்ந்தவர். அவர் அக்கால அரசர்களைப் பற்றிச் சிறந்த பாடல்களைப் பாடியுள்ளார். இன்னொருவர் பிற்காலத்தில் வாழ்ந்தவர். இவர் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம், நல்வழி ஆகிய நூல்களையும் பல தனிப் பாடல்களையும் பாடியுள்ளார். இவை சிறந்த நீதிகளைக் கூறுவன. சிறுவர்க்கும் வளர்ந்தவர்களுக்கும் உரியன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. இறைவனைப் பணி கொண்ட புலவர்

115720





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டில் வடபால் உள்ள தொண்டை நாட்டிலே திரு மழிசை என்னும் ஊரிலே பார்க்கவர் என்னும் முனிவருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. கைகளும் கால்களும் இல்லாமையால் அக்குழந்தையை ஓரிடத்தில் அவரும் அவர் மனைவியும் விட்டுச் சென்றனர்.

அவர்கள் சென்ற பின் இறைவன் அருளால் அக்குழந்தை கைகளும் கால்களும் உள்ள அழகிய குழந்தை ஆக விளங்கியது. மக்கட் பேறு இல்லாமல் இருந்த திருவாளன் என்பவனும் அவன் மனைவியும் அக்குழந்தையை அன்போடு வளர்த்து வந்தனர்.

இளமைப் பருவத்தில் அக்குழந்தை சகல கலைகளையும் கற்றுச் சிறப்புப் பெற்றதோடு பெரும் ஆற்றல் உள்ளதாகவும் விளங் கிற்று. அக்குழந்தையைத் திருமழிசைப்பிரான் என அனைவரும் அழைத்தார்கள்.

அவருக்கு நாள்தோறும் தொண்டு செய்துவந்த ஒருவருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. பெற்றோர் அப் பிள்ளைக்குக் கணி கண்ணன் எனப் பெயர் இட்டனர். கணிகண்ணன் இளமைப் பருவத் திற் திருமழிசைப்பிரானுக்கு மாணாக்கனாகி அவருக்கு நாள் தோறும் தொண்டு செய்து வந்தான்.

ஒருமுறை திருமழிசைப் பிரானும் கணிகண்ணனும் காஞ்சிமா நகருக்கு அண்மையில் உள்ள திருவெஃகா என்னும் ஊருக்குச் சென்று ஒரு திருமடம் அமைத்து அங்கு வாழ்ந்து வந்தனர்.

அங்கு திருமழிசைப்பிரான் தமக்குத் தொண்டுசெய்து வந்த முதிய பெண்ணைத் தம் அருளாற்றலால் இளம் பெண்ணாக மாற்றி னார். இதனை அந்நாட்டை ஆண்ட முதிய வயதினராக இருந்த அரசன் அறிந்தான். திருமழிசைப்பிரானின் அருளாற் தானும் இளம் வயதுள்ளவன் ஆக விரும்பினான்.

உடனே அரசன் கணிகண்ணனைத் தன் அரண்மனைக்கு வரச்செய்து திருமழிசைப்பிரானை அங்கு அழைத்து வரும்படி தெரி வித்தான். திருமழிசைப்பிரான் தன் திருமடத்தைவிட்டு வேறு எங் கும் செல்லார் எனக் கணிகண்ணன் அரசனிடம் கூறினான். தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பத்தை நிறைவேற்றும்படி அரசன் பலமுறை கணிகண்ணனிடம் கூறினான். கணிகண்ணன் அரசனின் வேண்டுதலை ஏற்கவில்லை.

தனது முதல் விருப்பம் நிறைவு பெறாத நிலையில் இருந்த அரசன் தன்னைப்பற்றிப் பாடல் ஒன்று பாடும் படி கணிகண்ணனை வேண்டினான். கடவுளைப் பாடுவதே அன்றி மக்களாயினரைத் தான் பாடுவதில்லை எனக் கணிகண்ணன் கூறினான். திருவுடை மன்னர்கள் கடவுளான திருமாலுக்கு ஒப்பானவர்கள். ஆதலின் அரசர்களைப் பாடலாம்; அரசர்களைப் பாடினாற் திருமாலைப் பாடியது ஆகும்" என அரசன் கூறினான்.

உடனே கணிகண்ணன் திருமாலைப் பற்றிப் பாடல் ஒன்று பாடினான். "திருமாலைப் பாடியிருக்கிறீர்; என்னைப் பாடவில்லையே" என அரசன் கூறினான். "அரசே! திருமாலும் அரசரும் ஒப்பானவர் எனக் கூறினீர். ஆகவே திருமாலைப் பாடினேன். திருமாலைப் பாடினால் அரசனைப் பாடியது ஆகும்" எனக் கணிகண்ணன் கூறினான்.

தன்னைப் பாடக் கணிகண்ணன் மறுத்ததனாற் கோபம் அடைந்த அரசன் தன் நாட்டை விட்டுச் செல்லும்படி கணிகண்ணனிடம் கூறினான்.

கணிகண்ணன் திருமழிசைப்பிரானிடம் அரசனது கட்டளையைத் தெரிவித்து அங்கிருந்து புறப்பட்டான். கணிகண்ணனின் பின் திருமழிசைப்பிரானும் சென்றார். அப்போது அவர் காஞ்சி மாநகர் திருமாலை நினைத்துப் பின்வரும் பாடலைப் பாடினார்.

"கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டாம் — துணிவுடைய
செந்நாப் புலவன்யான் செல்கின்றேன் நீயும்நின்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்."

உடனே அரசனுடைய நகரம் பொழிவிழந்து காணப்பட்டது. அந்நிலையைக் கண்டு அரசன் மிகக் கவலை அடைந்தான். திருமழிசைப்பிரானும் கணிகண்ணனும் அங்கிருந்து சென்றதே காரணம் என அமைச்சர்கள் அரசனுக்குக் கூறினர். உடனே அரசன் விரைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று மீண்டும் தம் நகருக்கு வரும்படி பணிவாக வேண்டினான். அரசனது பணிவான வேண்டுதலை ஏற்று அவர்கள் இருவரும் தம் திருமடத்திற்கு வந்தனர். அப்போது திருமழிசைப்பிரான் பின்வரும் பாடலைப் பாடினார்.

"கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டும் — துணிவுடைய
செந்நாப் புலவன்யான் போக்கொழிந்தேன் நீயும்நின்
பைந்நாகப் பாய்விரித்துக் கொள்."

உடனே அந் நகரம் முன்போலப் பொலிவுற்று விளங்கியது. அரசனும் மக்களும் திருமழிசைப்பிரானது அருளாற்றலை அறிந்து அவரைப் போற்றினர்.


"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்"
— திருவள்ளுவர்

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"
— தொல்காப்பியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. கம்பங் கொல்லை காத்த புலவர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் புலவர்களுட் கம்பர் மிகச் சிறந்த புலவர். இவர் சோழ நாட்டிலே திருவழுந்தூர் என்னும் ஊரிலே பிறந்தார். இவரது சிறுவயதில் தாய் தந்தையர் இறந்தனர். இவர் இன்னொருவர் பாதுகாப்பில் வளர்ந்தார். அவர் இவரைத் தமது கம்பங் கொல்லையைக் காவல் செய்யும் வேலையில் ஈடுபடுத்தினார்.

கம்பங் கொல்லையைக் காவல் செய்ததனாற் கம்பர் என்னும் பெயர் இவருக்கு வழங்கிற்று. ஒருநாள் குதிரையொன்று வந்து கம்பந்தினையைத் தின்றது. இவர் பாடல் ஒன்றைப் பாடி அதனைத் துரத்தினார். அது இறந்தது. இதனால் வீண் பகை வரும் என அஞ்சினார். உடனே இன்னொரு பாடலைப் பாடினார். அது உயிர்பெற்று எழுந்தது. இதன்பின் இவர் அவ்வேலையைச் செய்ய விரும்பாமல் வேறிடம் சென்றார்.

இவரது இயல்பான ஆற்றலை உணர்ந்த சடையப்ப வள்ளல் என்பவர் இவரை ஆதரித்து உதவினார். அக்காலத்தில் இவர் கற்றுவல்ல புலவர் ஆனார். தம்மை ஆதரித்து உதவிய சடையப்ப வள்ளலைப் பாராட்டிக் கம்பர் பாடல்கள் பல பாடியுள்ளார்.

இவரது புலமை ஆற்றலை அறிந்த சோழ அரசன் இவரைத் தமது அரசசபைப் புலவராக நியமித்தான். இவர் தமது பாடல்களினால் அரசனையும் அவையினரையும் மகிழ்வித்தார். இவரது புலமை ஆற்றலை நிகழ்ச்சிகள் பல உணர்த்துகின்றன.

சோழ மன்னனைப் பாடிப் புலவர்கள் பரிசில்கள் பெற்று வந்தனர். வறுமையால் வாடிய கல்வி அறிவில்லா ஒருவன் தானும் பாடல் ஒன்று பாடி அரசனிடம் பரிசில் பெற விரும்பினான். ஒருநாள் பல இடங்களிலும் திரிந்து தான் கண்டவற்றையும் கேட்டவற்றையும் வைத்துப் பின்வரும் பாடலை எழுதினான்.

மண்ணுண்ணி மாப்பிள்ளையே
காவிறையே கூவிறையே
உங்களப்பன் கோவிற்பெருச்சாளி
கன்னாபின்னா மன்னா தென்னா
சோழகங்கப் பெருமானே!

அடுத்தநாள் அவன் சோழ அரசனிடம் சென்று இப்பாடலைப் பாடினான். "இது பாடலும் அன்று, இதற்குப் பொருளும் இல்லை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் சபையில் இருந்த புலவர்கள் கூறினர். கம்பர் அவனது நிலையை உணர்ந்து அவனுக்கு உதவிசெய்ய விரும்பினார். "இது நல்ல பாடல். இதற்குப் பொருள் இருக்கிறது. இதற்குப் பரிசில் வழங்கலாம்" எனக் கம்பர் தெரிவித்தார். இப்பாடலுக்குப் பின்வருமாறு பொருள் கூறினார்.

மண் உண்ணி – நிலத்தை உண்ட திருமாலே, மாப்பிள்ளையே – திருமகளுக்குப் பிள்ளை ஆகிய மன்மதனே (மா – திருமகள்).

கா இறையே – கற்பகக் காவுக்குத் தலைவனே, கூ இறையே – பூமிக்கு அரசனே, (கு – பூமி).

உங்கள் அப்பன் – உங்களது தந்தை ஆகிய, கோ – அரசன், வில் பெரிசு ஆளி – விற் போரிற் பெரிய சிங்கம் போன்றவன்.
(கோவில் – கோ+வில்; பெரிச்சாளி – பெரிசு+ஆளி)

கன்னா – கொடையிற் கன்னனே, பின்னா மன்னா – போரில் பின் வாங்காத அரசனே (பின்னா – பின்+ஆ), தென்னா – தெற்குப் பாண்டி நாட்டிற்கு அரசனே,

சோழ கங்கப் பெருமானே-சோழ அரசர்களுள் பெருமைபெற்றவனே.

அரசன் கம்பரின் புலமை ஆற்றலைப் பாராட்டி அவ்வறியவனுக்குப் பெரும் பரிசில்கள் கொடுத்தான்.

அரச சபையில் கம்பருக்கு அதிக மதிப்பு இருப்பதைப் புலவர்கள் சிலர் விரும்பவில்லை. அதனால் இவரது பெருமையைக் குறைக்க முயற்சி செய்தனர். ஒரு நாள் ஒரு வீதி வழியே கம்பர் சென்றார். குறைந்த குலத்துப் பொன்னி என்பவள் அங்கு நின்றாள். அவள் இவரை வரவேற்று உபசரித்துப் பாராட்டினாள். தனக்கு அவர் அடிமை என எழுதித் தரும்படி அவள் கேட்டாள். "தாசிப் பொன்னிக்குக் கம்பன் அடிமை" என எழுதிக் கொடுத்தார். அந்த ஓலை அரசனுக்குக் கிடைத்தது. அரசன் அதனைக் கம்பரிடம் கொடுத்தார். அவ்வாறு எழுதியது உண்மை எனக் கம்பர் தெரிவித்துப் பின்வருமாறு பொருள் கூறினார். "தா(ய்) – தாய் ஆகிய, சி – சிறப்பு உள்ள பொன்னிக்கு – திருமகளுக்கு, கம்பன் அடிமை – கம்பன் அடியவன்." அனைவரும் கம்பரின் பேராற்றலைப் போற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலி என்பவள் ஒரு வீட்டைக் கட்டினாள். அவ்வீட்டுச் சுவர் ஏதோ ஒரு காரணத்தால் அடிக்கடி இடிந்து விழுந்து கொண்டிருந்தது. ஒருநாள் அவ்வழியே சென்ற கம்பர் அச்சுவர் வைக்கும் வேலையை ஏற்றார். சுவரை வைத்துவிட்டுப் பின்வரும் பாடலைப் பாடினார்.

"மற்கொண்ட திண்புயத்தான் மாநகர்விட் டிங்குவந்தேன்
சொற்கொண்ட பாவின் சுவையறிவார் ஈங்கில்லையே
விற்கொண்ட வாணுதலாள் வேலிதரும் கூலியாம்
நெற்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே"

சுவர் நிலைத்து நின்றது. அவள் மிக மகிழ்ந்து கூலியாக நெல்லைக் கொடுத்தாள். கம்பர் போனபின் அச்சுவர் விழுந்துவிட்டது. உடனே அப்பெண் அவர் சென்ற வழியே சென்று இதனை அவருக்குத் தெரிவித்தாள். கம்பர் மீண்டும் சுவரை வைத்து விட்டு முன் பாடிய பாடலின் நான்காவது அடியை மாற்றி "நெற்கொண்டு போனாலும் நில்லாய் நெடுஞ்சுவரே" எனப் பாடினார்.

அதன் சுவர் நிலைத்து நின்றது. வேலி மிக மகிழ்ந்து புலவரைப் போற்றிப் பரிசில்கள் வழங்கினாள். கம்பர் அவற்றை வறியவர்களுக்குக் கொடுத்துவிட்டுச் சென்றார்.

சோழ மன்னனுக்கும் கம்பருக்கும் ஒருமுறை மிக வெறுப்பு ஏற்பட்டது. அதனால் தன் நாட்டைவிட்டுச் செல்லும்படி அரசன் கம்பருக்குத் தெரிவித்தான். உடனே கம்பர்

"மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ
உன்னையறிந் தோதமிழை ஓதினேன் – என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத கொம்புண்டோ உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு"

என்னும் பாடலைப் பாடிவிட்டுச் சேரநாடு சென்று, சேர அரசனின் அவைப் புலவராக இருந்தார்.

கம்பர் இல்லாத சோழனது அரச சபை பொலிவு அற்று இருந்தது. இதனைச் சோழ அரசன் உணர்ந்தான். ஆகவே கம்பரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்து வரும்படி தூதுவரை அனுப்பினான். கம்பர் சோழ அரசனது அழைப்பை ஏற்று மீண்டும் சோழ அரசனிடம் சென்றார்.

கம்பர் கலைமகள் அருள் பெற்றவர். "கம்பராமாயணம்" என்னும் பெரும் காவியத்தையும் "சரசுவதி அந்தாதி" என்னும் நூலையும் பாடியுள்ளார். கம்பராமாயணம் உலகப் புகழ்பெற்ற பெரும் காவியம். இளமையிற் தம்மை ஆதரித்த சடையப்பவள்ளலை இப்பெரும் காவியத்தில் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

இக்காவியத்தினாற் கம்பர் உலகப் பெரும் புலவர்களுள் ஒருவராக விளங்குகின்றார். 'கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்னும் பழமொழி வழங்குகின்றது.


"கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்
காளி தாசன் கவிதை புனைந்ததும்
..................................................................
சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்
தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்
பாரில் நல்லிசைப் பாண்டியர் சோழர்கள்
பார ளித்ததும் தர்மம் வளர்த்ததும்
..................................................................
அன்ன யாவும் அறிந்திலர் பாரதத்
தாங்கி லம்பயில் பள்ளியுட் போகுநர்"

— மகாகவி பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. வெட்டப்பெற்ற உடல்களை உயிர்பெறச்செய்த புலவர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இற்றைக்கு எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் சோழநாட்டில் ஒட்டக்கூத்தர் என்னும் ஒருவர் இருந்தார். இவர் மிகச் சிறந்த தமிழ்ப் புலவர். தமிழ்ப்பாக்கள் பாடுவதில் மிகவும் வல்லவர். தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை நன்கு கற்றவர்.

இவர் காலத்திலே சோழ நாட்டைக் குலோத்துங்கன் என்னும் சோழ மன்னன் ஆட்சி செய்தான். இம் மன்னனுக்கு இளமைக் காலத்தில் தமிழ் ஆசிரியராக இவர் இருந்தார். அதனால் இம்மன்னன் இவரைத் தன் அரசவைப் புலவராகவும் அமைச்சராகவும் நியமித்தான். அரசனது பெரும் மதிப்பும் ஆதரவும் இவருக்கு இருந்தது. இவர் அதனால் நாட்டிற் பெரும் செல்வாக்கும் பெரும் புகழும் உள்ளவராக விளங்கினார்.

இப்புலவர் மிகவும் தமிழ்ப் பற்றுள்ளவர். அரைகுறைத் தமிழ் அறிவொடு புலவர் எனத் தமக்குப் பெயர் வைத்துள்ளவர்களை இவர் வெறுத்தார். அதனால் சோழ மன்னனிடம் பரிசில் பெற வரும் புலவர்களிடம் பல வினாக்கள் வினாவுவார். தக்க பதில் சொல்லாவிடில் அவர்களைச் சிறையில் அடைத்து விடுவார். இதனால் இவர் காலத்தில் அரைகுறைத் தமிழ் அறிவுள்ள புலவர்கள் இல்லாது ஒழிந்தனர்.

ஒருமுறை இவரது மரபினர் வந்து தம் மரபினரைப்பற்றி ஒரு நூல் பாடும்படி கேட்டனர். "உங்கள் மரபிலே தலைப்பிள்ளைகளாக உள்ளவர்களின் தலைகள் எழுபது தந்தால் ஒரு நூல் பாடுவேன்" என இவர் கூறினார். வீர மரபினரான அவர்கள் இவர் கூறியபடி தம் தலைப்பிள்ளைகளின் தலைகளைத் தாங்களே வெட்டிக்கொண்டு வந்து இவர் முன் குவித்தனர். கூத்தர் அத்தலைகளின் மேல் இருந்து கலைவாணியை நினைத்து எழுபது பாடல்களைப் பாடினார். ஈற்றிலே கலைவாணியைத் துதித்துப் பின்வரும் பாடலைப் பாடினார்.

"கலைவாணி நீயுலகில் இருப்பதுவும்
கல்வியுணர் கவிவல் லோரைத்
தலையாகக் காப்பதுவும் அவர்நாவில்
வாழ்வதுவும் சத்தியமே யன்றோ
சிலைவாண னாவிருந்தா யிரம்புயங்கள்
துணிந்தும்உயர் சீவன் உற்றான்
தலையாவி கொடுத்திடும் செங்குந் தருயிர்
பெற்றிடநீ தயைசெய் வாயே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே அத்தலைகள் உயிர்பெற்றுத் தத்தம் உடல்களோடு பொருந்தி எழுந்தன. அனைவரும் இவர் அருட் பெருமையை உணர்ந்தனர்.

கூத்தர் சமயப்பற்றும் திருமுறைப்பற்றும் உள்ளவர். எவராவது திருமுறைப் பாடல்களைத் தவறாகப் படித்தால் தாம் வைத்திருக்கும் ஈட்டியால் அடித்துவிடுவார். ஒருமுறை பிச்சை பெற வந்த ஒருவன் திருமுறைப் பாடல் ஒன்றைத் தவறாகப் பாடினான். உரமாக இவர் அவனை அடித்துவிட்டார். அவன் இறந்து விட்டான். இறந்தவனது உறவினர் இவரைக் கொல்வதாகப் பயமுறுத்தினர். கூத்தர் காளி தேவியை வேண்டினார். காளி தேவியின் ஆணைப்படி கூத்தர் வீரபத்திரக் கடவுளை நினைத்துத் 'தக்க யாகப் பரணி' என்னும் நூலைப் பாடினார். கூத்தர் பாடக் காளி தேவி எழுதினார் என்பர். நூலின் நிறைவில் இறந்தவன் உயிர்பெற்று எழுந்தான். அனைவரும் கூத்தரை வாழ்த்தினர்.

இவரது இயற் பெயர் கூத்தர் என்பது. வெட்டிய தலைகள் உடலொடு ஒட்டி எழச் செய்ததனால் இவருக்கு ஒட்டக் கூத்தர் என்னும் பெயர் வழங்கிற்று. இவர் கலைவாணியை வழிபாடு செய்பவர். ஆதலின் கலைவாணிக்குத் தமது கூத்தனூரில் கோயில் அமைத்தார். அக் கோயில் இப்போதும் இருக்கிறது.

இவர் காலத்திலே கம்பர், ஔவையார், புகழேந்திப்புலவர் முதலிய பெரும் புலவர்கள் வாழ்ந்தனர். இவர் சிறந்த பல தமிழ் நூல்களையும், பாடல்களையும் பாடியுள்ளார்.

—●—


"குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியன் இங்கில்லைக்
குறும்பி அளவாய்க் காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட்டும் அறுப்பதற்கோ வில்லி இல்லை
இரண்டொன்றாய் முடிந்துதலை இறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவிஒட்டக் கூத்தன் இல்லை
விளையாட்டாய்க் கவிதைதனை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைகள் உண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே"

— படிக்காசுத் தம்பிரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. ஆசு கவியாற் புகழ்பெற்ற புலவர்



Discarded
Nallur Branch Library



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டிலே திருவானைக்கா என்னும் திருத்தலம் ஒன்று உண்டு. கோயிற் பூசைக்கு உரிய பணிகளைச் செய்யும் அந் தணர் ஒருவர் அங்கு இருந்தார். கோயிற் பணிகளை மிக அன்போடு செய்துவந்தார். அக்கோவிலில் எழுந்தருளி இருக்கும் உலக அன்னை ஒருநாள் அவர் முன் சென்று வாயைத் திறக்கும்படி சொல்லித் தம் வாயில் இருந்த வெற்றிலைச் சாற்றை அவரது வாயில் உமிழ்ந்து உண்ணச் செய்து மறைந்தார். அன்று முதல் இவர் எவ்வகைப் பாடல் களையும் விரைந்து பாடும் ஆற்றலைப் பெற்றார். அதனால் அவருக்குக் காளமேகப் புலவர் என்னும் பெயர் உண்டாயிற்று.

உலக அன்னையின் அருள் பெற்ற பின்பு திருத்தலங்கள் தோறும் சென்று பாடல்கள் பாடி வழிபட்டார். இருபொருள் தரும் சொற்களைப் பாடுவதிலும், பழிப்பது போலப் புகழ்ந்தும், புகழ்வது போலப் பழித்தும் பாடுவதிலும், கொடுத்த பொருள் பற்றி விரைந்து பாடுவதிலும் வல்லவராய் விளங்கினார். அதனால் இவர் 'ஆசுகவி' எனப் புகழ்பெற்றார். இவரது பாடல்கள் மிகவும் சொற்சுவையும் பொருட் சுவையும் உடையன.

காஞ்சிபுரத்தில் இவர் இருந்தபோது திருவிழா ஒன்றிலே திருமால் கருட ஊர்தியில் வீதிவலம் வந்தார். அப்போது இவர் பின்வரும் பாடலைப் பாடினார்.

"பெருமாளும் நல்ல பெருமாள் அவர்தம்
திருநாளும் நல்ல திருநாள் — பெருமாள்
இருந்திடத்திற் சும்மா இராமையா லந்தோ
பருந்தெடுத்துப் போகிறதே பார்"

இன்னொரு திருத்தலத்திற் கந்தன், சிவன், உமை, விநாயகர், திருமாள் ஆகிய கடவுளரின் திருவுருவங்கள் வீதி வலம் வந்தன. அப்போது இவர் பின்வரும் பாடலைப் பாடினார்.

"அப்பன் இரந்துண்ணி; ஆத்தாள் மலைநீலி;
ஒப்பரிய மாமன் உறிதிருடி – சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன்; ஆறுமுகத் தானுக்கிங்
கென்ன பெருமை இது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது காலத்திற் திருமலைராயன் என்னும் அரசன் ஒருவன் இருந்தான். அவன் தமிழ்ப் பற்று உள்ளவன். அதனால் தமிழ்ப் புலவர்களுக்கு வேண்டும் பொருள் கொடுத்து உதவினான். அதிமதுர கவி என்பவர் அரசனிடம் விருது பல பெற்று அரசவைப் புலவராக விளங்கினார். அவருக்கு உதவியாகப் புலவர் பலர் இருந்தனர். அரசனது ஆதரவு இருந்ததனால் அவர்கள் ஏனைய புலவர்களை அவமதித்துத் துன்புறுத்தினர். இதனைக் காளமேகப் புலவர் கேள்வியுற்றார். அவர்களது செருக்கை இல்லாமற் செய்ய நினைத்துத் திருமலை அரசனிடம் சென்றார்.

அப்போது அரச வீதியிலே அதிமதுரகவி ஏனைய புலவர்கள் சூழ ஆடம்பரமாக யானைமீது ஊர்வலமாக வந்தார். அனைவரும் அவரது புகழைக் கூறி வாழ்த்தினர். ஊர்வலத்தில் முன்பாக வந்தவர்கள் 'அதிமதுரகவி வாழ்க' எனக் கூறினர். அவ்வாறு கூறும்படி எதிரே வந்த காளமேகப் புலவரிடம் அவர்கள் கூறினார்கள். 'அதிமதுரம் என்றால் மிக இனிமை; இவரிடம் அத்தகைய சிறப்பு என்ன இருக்கிறது' எனக் கேட்டார். அவர்கள் கூறியபடி வாழ்த்துக் கூற மறுத்துவிட்டார். 'எங்கள் அரசவைப் புலவரைப்பற்றி அவமதிப்பதற்கு நீ யார்' என அவர்கள் கேட்டனர்.

உடனே இவர் 'தூது ஐந்து நாழிகையில்; ஆறு நாழிகையில் சொற்சந்த மாலை; அந்தாதி ஏழு நாழிகையில்; கோவை பத்து நாழிகையில்; பரணி ஒருநாள்; காவியம் இரு நாளில் பாட வல்லவன். பொய்ப் புலவர்களை அடக்கும் காளமேகப் புலவன் யான்' என ஒரு பாடலை எழுதிக் கொடுத்தார்.

இச்செய்தியை அவர்கள் அரசனுக்கு அறிவித்தனர். அரசன் ஆணையின்படி அரச தூதுவர்கள் இவரை அரசனிடம் அழைத்துச் சென்றனர். அரசன் இவருக்கு இருக்கை கொடுக்கவில்லை. உடனே இவர் பின்வரும் பாடல் முதலாக உள்ள முப்பது பாடல்களைப் பாடினார்.

"வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் வெள்ளை
அரியா சனத்தில் அரசரோ டெம்மைச்
சரியா சனம்வைத்த தாய்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே கலைமகள் அருளால் அரசனுக்குப் பக்கத்தில் இருக்கை ஒன்று தோன்றியது. இவர் அதில் இருந்தார். உடனே அங்கிருந்த புலவர்கள் அனைவரும் அதிசயத்தோடு இவரைப் பார்த்தனர். 'நீங்கள் யார்?' என இவர் அவர்களைக் கேட்டார். 'நாங்கள் கவி யரசர்கள்' என அவர்கள் கூறினர். உடனே இவர் பின்வரும் பாடலைப் பாடினார்.

"வாலெங்கே; நீண்டெழுந்த வல்லுகிரெங் கே; நாலு
காலெங்கே; ஊன் வடிந்த கண்ணெங்கே; — சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்காள்! நீங்கள்
கவிராயர் என்றிருந்தக் கால்"

(கவி – புலவர்; குரங்கு)

'நீர் காளமேகம் என்று கூறுகிறீர், அப்படியானால் மழை பொழிய வேண்டுமே' எனக் கூறினர். 'நல்ல நூற் கடலில் நீர் பருகிப் பொதிய மலையிற் தங்கிச் செருக்குற்ற புலவர்களின் உள்ளத்திலே இடித்து முழங்கிக் கவிமழை பெய்ய வந்துள்ளேன்' என இவர் கூறினார். 'நீர் பெரும் பெருமை பேசுகிறீர்; நீர் அரிகண்டம் பாடுவீரா' என அவர்கள் கேட்டனர். 'அதனிலும் மேலான யமகண்டம் பாடு வேன்' என இவர் கூறினார். அதனை இவர் விளக்கிக் கூறினார். அரசன் அதற்கான ஒழுங்குகளைச் செய்தான். பதினாறு அடி நீளம் அகலம் ஆழம் உள்ள கிடங்கு ஒன்று அமைக்கப்பட்டது. அதிற் பெரும் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. மேலே அமைந்த கம்பங் களில் இருந்து நடுவில் கட்டப்பெற்ற உறியில் இவர் இருந்து புலவர் கள் ஒவ்வொருவரும் கொடுத்த தரவுகளை வைத்துப் பாடல்களைப் பாடினார்.

'திருமால் அவதாரம் பத்தும் ஒரு வெண்பாவில் வைத்துப் பாடு' என ஒருவர் கேட்டார். 'பன்னிரண்டு இராசிகளும் ஒரு வெண்பா வில் வைத்துப் பாடு' என ஒருவர் கேட்டார். 'குடத்திலே கங்கை அடங்கும்' எனப் பாடும்படி ஒருவர் கேட்டார். ஒருவர், ஒன்று முதல் பதினெட்டு எண்களை வைத்து ஒரு வெண்பாவைப் பாடும் படி கேட் டார். வைக்கோலுக்கும் யானைக்கும், பாம்புக்கும் எள்ளுக்கும், நாய்க்கும் வானவில்லுக்கும், திருமாலுக்கும் வெற்றிலைக்கும் சிலேடைகள் வரப் பாடும்படி வேறு புலவர்கள் கேட்டனர். 'ஐந்து கொம்பு வரப் பாடு' என ஒருவர் கேட்டார். 'ததா தூ தே' எனப் பாடு என ஒருவர் கேட்டார். 'அடிப்பது மத்தாலே அழ' என்பதை ஈற்றடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகப் பாடும்படி ஒருவர் கேட்டார். 'கஞ்சிகுடி' என்பதை இரு பொருளில் வைத்துப் பாடும்படி ஒருவர் கேட்டார். அனைவரும் கேட்ட அனைத்துப் பாடல்களையும் எவ்வகைப் பிழையும் இல்லாமல் பாடி நிறைவு செய்தார். பின்பு உறியில் இருந்து இறங்கினார். அதி அற்புதமாகப் பாடல்களை இவர் பாடினார். ஆயினும் அரசனோ அரச சபைப் புலவர்களோ இவரைப் பாராட்டவில்லை.

இவர் ஒரு கடையில் இருந்தபோது இவரது ஆற்றலை மேலும் அறிவதற்காக மேகமும், பசுவும், இரத்தினமும் வாங்கி வரும்படி ஒருவரை அக்கடைக்கு அதிமதுரகவி அனுப்பினார். பசுவும் இரத்தினமும் கொடுக்கலாம். மேகத்தை எப்படி கொடுப்பது எனக் கடைக்காரன் கவலைப்பட்டான். கார் - மேகம்; ஆ - பசு, மணி - இரத்தினம். ஆகவே 'காரமணிப் பயறு' கொடுத்தனுப்பும்படி இவர் கடைக்காரனிடம் கூறினார். இதனால் இவரது அதி அற்புத ஆற்றலை அதிமதுரகவி அறிந்துகொண்டான்.

பின்பு திருத்தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருவாரூரிற் தங்கி இருந்தார். அங்கு கோவிற் சுவரிலே மகாவித்துவான் ஒருவர் ஒரு பாடலின் முற்பகுதியை எழுத இவர் அதன் பிற்பகுதியை எழுதி நிறைவு செய்தார். இவர் இறந்தபோது இவரது மிக்க புலமை ஆற்றலை அறிந்த மகாவித்துவான் ஒருவன் இவரிடம் சென்று

"ஆசுகவி யாலே அகில உலகமெல்லாம்
வீசு கவிக்காள மேகமே — பூசுரா
விண்கொண்ட செந்தழலாய் வேகின் றதையோ
மண்தின்ற பாணமென்ற வாய்'

எனப் பாடி இவரைப் போற்றினார். தமிழ்ப் புலவர்களுள் இவர் மிகச் சிறந்த புலவர் ஆவார். 'ஆசுகவிக்கு ஒரு காளமேகம்' எனப் புகழ்பெற்றார்.

"முத்தமிழ் மாமுனி நீள்வரையே நின்று
மொய்ம்புறக் காக்கும் தமிழ்நாடு"
— மகாகவி பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. இரட்டைப் புலவர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழ நாட்டிலே ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் ஆமிலத் துறை என்னும் ஊரிலே பிள்ளைகள் இருவர் இருந்தனர். இருவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவர் முடவர். ஒருவர் குருடர். இருவரும் நண்பர்கள் ஆகி இணைபிரியாது வாழ்ந்து வந்தனர். செல்லும் இடங்களுக்குச் சேர்ந்தே செல்வர். குருடர் முடவரைத் தம் தோளில் வைத்திருப்பர். முடவர் வழிகாட்டுவர். இருவரும் சேர்ந்தே முயற்சிகள் செய்வர். இவற்றால் இவர்களுக்கு இரட்டையர் என்னும் பெயர் வழங்கியது.

இளமைப் பருவத்தில் இருவரும் சேர்ந்து கல்வி கற்றனர். முடவர் நூல்களை வாசிப்பார். குருடர் அவைகளைக் கேட்டு மனதிற் பதிப்பர். இவ்வாறு இவர்கள் பல நூல்களைக் கற்றுச் சிறந்த புலவர் கள் ஆயினர். அருளாற்றல் உள்ளவர்களாகவும் இவர்கள் இருந் தனர். அதனால் இவர்களுக்குத் 'தெய்வப் புலவர்கள்' என்னும் பெயரும் வழங்கியது.

இவர்கள் வளர்ந்தவர்கள் ஆனதும் பல இடங்களுக்குச் சென்றனர். திருத்தலங்களுக்குச் சென்று பாடல்கள் பாடி வணங் கினர். பொருள் உள்ளவர்களைப் பாடிப் பரிசில் பெற்றுத் தம் வாழ்க் கைக்குப் பயன்படுத்தினர். இருவரும் சேர்ந்தே ஒரு பாடலைப் பாடு வர். முடவர் பாடலின் முதல் இரண்டு அடிகளையும் பாடுவர். குருடர் அப்பாடலின் பின் இரு அடிகளையும் பாடுவர்.

இவர்கள் ஒருமுறை தில்லைத் திருத்தலத்திற்குச் சென்று வணங்கினர். அங்கே பொருள் உள்ளவர் ஒருவரிடம் சென்று பாடி னர். அவர் இவர்களுக்குப் பொருள் எதுவும் கொடுக்கவில்லை.

உடனே முடவர்

'மூடர் முன் பாடலை மொழிந்தால் அறிவாரோ'

எனப் பாடினார். உடனே குருடர்

'செந்திருவைப் போலணங்கைச் சிங்காரித் தென்னபயன்
அந்தகனே நாயகனா னால்'

எனப் பாடி அப்பாடலை நிறைவு செய்தார்.

(செந்திரு – இலக்குமி, அந்தகன் – குருடன்)

ஒருமுறை இவர்கள் மதுரைத் திருக்குளத்தில் நீராடச் சென்ற னர். முடவர் மேற்படியில் இருந்தார். குருடர் கீழ்ப்படியில் இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தம் ஆடையை நீரிற் கழுவிக்கொண்டிருந்தார். அப்போது அந்த ஆடை கைதவறி நீருடன் சென்றுவிட்டது. அதைப் பார்த்து முடவர்

'அப்பிலே தோய்த்திட் டடுத்தடுத்து யாமதனைத்
தப்பினால் நம்மையது தப்பாதோ' எனப் பாடினார்.

'ஆனாலும் கந்தை அதிலுமோர் ஆயிரங்கண்
போனாலும் துயர்போச்சுப் போ' எனக் குருடர் பாடினார்.

உடனே முடவர்

'கண்ணா யிரமுடைய கந்தையே யானாலும்
தண்ணார் குளிரையுடன் தாங்காதோ' எனப் பாடினார்.

'இக்கலிங்கம் போனாலென் ஏகலிங்க மாமதுரைச்
சொக்கலிங்கம் உண்டே துணை' எனப் பாடினார் குருடர்.

உடனே ஆடை நீரிலே மிதந்து குருடர் கைக்கு வந்தது.

ஒருநாள் இவர்கள் ஒரு வழியிலே சென்றனர். அவ்வழியின் பக்கலில் ஒரு கோயிலும், ஒரு குளமும் இருந்தன, கோயிலின் முன் தங்கள் பொதியை வைத்துவிட்டுக் குளத்தில் நீராடச் சென்றனர். மீண்டு வந்தபோது அவர்களது பொதியில் சில பொருட்கள் இல்லாமல் இருந்தன. மனம் வருந்திய முடவர்

'தம்பியோ பெண் திருடி; தாயாருடன் பிறந்த
வம்பனோ நெய்திருடும் மாமாயன்'
எனப் பாடினார்.

'மூத்த பிள்ளை யாரே முடிச்சவிழ்த்தீர்; போமோ உம்
கோத்திரத்திற் குள்ள குணம்'
எனப் பாடினார் குருடர்.

சிறிது நேரத்துள் பழைய பொருள்களோடு புதிய பொருள்களும் வந்து சேர்ந்தன.


(வம்பன் – ஏமாற்றுபவன், கோத்திரம் – குலம்)
(அப்பு–நீர், தப்புதல்–துவைத்தல், விலகிச் செல்லல்.
கலிங்கம்–ஆடை, ஏகலிங்கம்–இறைவன் திருவுரு.
சொக்கலிங்கம் – கடவுள்)

சிறந்த தமிழ் நூல்களை இவர்கள் பாடியுள்ளனர். கலம்பகம் என்னும் நூல்வகை பாடுவதில் இவர்கள் வல்லவர்.' கலம்பத்திற்கு இரட்டையர்' என இவர்களை அறிஞர்கள் பாராட்டுவர். நவீன கல்வி முறை இல்லாத அக்காலத்தில் முடவரும் குருடருமான இவர்கள் கல்வி கற்றுச் சிறந்த புலவர்களாக விளங்கியமை உலகத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. புதிய பாடல்களைப் பழைய பாடல்களாக ஆக்கிய புலவர்



115720



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையை ஒல்லாந்தர் என்னும் ஐரோப்பியர் ஆட்சி செய்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருபாலை என்னும் ஊரிலே நல்லை நாத முதலியார் என்னும் புலவர் ஒருவர் இருந்தார். அவர் இளமைக்காலத்திலே தக்க அறிஞர்களிடம் தமிழ் நூல்களைக் கற்றுச் சிறந்த தமிழ்ப் புலவராக விளங்கினார். சிறந்த நினைவாற்றல் உள்ளவர். ஒருமுறை கேட்டவைகளும் படித்தவைகளும் அவர் மனதில் நன்கு பதிந்துவிடும்.

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணை என்னும் இடத்தில் வைத்தியலிங்கச் செட்டியார் என்னும் வள்ளல் ஒருவர் இருந்தார். இவர் பெரும் தமிழ்ப்பற்று உள்ளவர். அதனால் தமிழ்ப் புலவர்களுக்கு வேண்டுவன கொடுத்து அவர்களை ஆதரித்தார். புலவர்களின் பாடல்களைக் கேட்டுத் தக்க பரிசில்கள் வழங்கினார்.

செந்திக்கவி என்னும் புலவர் ஒருவர் தமிழ்நாட்டில் இருந்தார். அவர் சிறந்த புலவர். தமக்கு ஒப்பான புலவர் வேறு எவரும் இல்லை என்னும் எண்ணம் அவருக்கு இருந்தது. அவர் வைத்திலிங்கச் செட்டியாரிடம் பரிசில் பெறுவதற்காகச் சென்றார். அவரது பாடல்களைக் கேட்பதற்காகப் புலவர்கள் பலர் அங்கு சென்றனர்.

தாம் பாடி வந்த பாடல்களைச் செந்திக்கவி வைத்திலிங்கச் செட்டியார் முன்னிலையில் பாடி நிறைவு செய்தார். அவரது பாடல்களைக் கேட்டுச் செட்டியாரும் ஏனைய புலவர்களும் மகிழ்ந்து அப் புலவரைப் பாராட்டினர். அப்போது அங்கு இருந்த நல்லைநாத முதலியார் எழுந்து "இப்பாடல்கள் புதிய பாடல்கள் அல்ல; இவை பழைய பாடல்கள்" எனக் கூறினார்.

அப்போது அச்சபையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. செந்திக்கவி பெரும் அதிர்ச்சி அடைந்தார். அவர் நல்லைநாதரைப் பார்த்து "இப் பாடல்களை யானே எழுதினேன். இவை எனது புதிய பாடல்க்ள். இவைகள் பழைய பாடல்கள் என்று கூறுகிறீர். அப்படியானால் இப்பாடல்கள் முழுவதையும் சொல்லுவீரா" எனக் கேட்டார். உடனே நல்லைநாத முதலியார் எழுந்து பாடல்கள் முழுவதையும் எவ்வித பிழையும் இல்லாமல் சொல்லிவிட்டு இருந்தார். எல்லோரும் திகைத்துப் போய் இருந்தனர். எவரும் எதுவுமே பேசவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரத்தின் பின் நல்லை நாதர் எழுந்தார். செட்டி யாரைப் பார்த்து "இப்பாடல்கள் சிறந்த பாடல்கள். இவை செந்திக் கவி எழுதிய பாட்டுக்களே. சிறந்த புலவர்கள் இங்கும் உளர் என் பதைக் காட்டற்காகவே மேற்கூறியவாறு செய்தேன். இப்பாடல் களுக்குத் தாங்கள் பரிசில் வழங்கலாம்" எனக் கூறினார்.

வைத்தியலிங்கச் செட்டியார் செந்திக்கவிக்குப் பெரும் பரிசில் வழங்கினார். அதே அளவு பரிசில் நல்லைநாத முதலியாருக்கும் செட்டியார் வழங்கினார். ஆனால் நல்லைநாத முதலியார் அப் பரிசிலைச் செந்திக்கவிக்கே கொடுத்தார். செந்திக்கவி, நல்லைநாத முதலியாரது ஆற்றலையும் பண்பையும் பெரிதும் பாராட்டி மகிழ்ந்தார்.

நல்லைநாத முதலியாரின் மகன் சேனாதிராய முதலியார்; நல்லைநாத முதலியாரைப் போலச் சேனாதிராய முதலியாரும் சிறந்த தமிழ்ப் புலவராக விளங்கினார். சேனாதிராய முதலியார் தமிழிலும் வட மொழியிலும் வல்லவர். ஆங்கிலம், போர்த்துக்கேயம், டச்சு ஆகிய மொழிகளையும் நன்கு கற்றவர். நீதிமன்ற முதலியாராகவும், நீதி பதியாகவும் விளங்கியவர். ஈழத்தில் சிறந்த புலவர் பலருக்கு ஆசிரிய ராக இருந்தவர். தமிழ் உலகில் புகழ்பெற்ற ஆறுமுக நாவலர் அவர்களின் ஆசிரியர் இவரே ஆவர். இவர்களினால் ஈழத்திற் சிறந்த பெரும் புலவர் பரம்பரை உருவாகி வளர்ந்தது. அதனால் ஈழநாடு அக்காலத்திற் கல்வியிலும், தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகியவற் றிலும், கல்வித்துறையிலும், செயலாற்றலிலும் சிறந்து விளங்கியது. ஈழத்து அறிஞர் பலர் இலங்கையிலும், தமிழகத்திலும், மலேசியா விலும் ஏனைய நாடுகளிலும் பெரும் பணிகள் புரிந்தும், பெரும் பதவிகள் பெற்றும் புகழ்பெற்றனர்.

"வான்குருவி யின்கூடும் வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்கும் செய்யரிதால் — யாம்பெரிதும்
வல்லோமே என்று வலிமைசொல்ல வேண்டாம்காண்
எல்லோர்க்கும் ஒவ்வொன் றெளிது.

— ஔவையார்



115/20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Discarded
Nallur Branch Library

# அறிவுரைகள்

"அறம் பொருள் இன்பமும், வீடும் பயக்கும்;
புறங்கடை நல்லிசையும் நாட்டும்; — உறுங்கவலொன்று
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியினூங்கு இல்லை;
சிற்றுயிர்க்கு உற்ற துணை"

— நீதிநெறி விளக்கம்

●

"கற்க கசடற; கற்பவை கற்றபின்
நிற்க; அதற்குத் தக"

— திருக்குறள்

●

"வைகறை யாமம் துயிலெழுந்து தாம்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக; என்பதே
முந்தையோர் கண்ட முறை"

— ஆசாரக் கோவை

●

"கற்றலிற் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று"
(சிறந்த — சிறந்தது) — முதுமொழிக் காஞ்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org